தினமணி

## வளர்ச்சி அதிகரிக்கும், வட்டி குறையும்: பொருளாதார ஆய்வறிக்கை தகவல்

First Published : 16 Mar 2012 01:56:43 AM IST



புது தில்லி, மார்ச் 15: இந்திய பொருளாதார நிலவரம் குறித்து நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த நிதி ஆண்டில் (2011-12) மிகவும் மோசமானதாக அமைந்தது என்று அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. அதேசமயம் வரும் நிதி ஆண்டில் (2012-13) வளர்ச்சி 7.6 சதவீத அளவுக்கு உயரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பற்றாக்குறையைக் கட்டுக்குள் கொண்டு வருதல், வரி சீர்திருத்தம், பன்முக சில்லறை வர்த்தக நிறுவனங்களுக்கு அனுமதி, டீசல் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தி பொதுச் சந்தை விலைக்கு விற்பனை செய்வது உள்ளிட்டவற்றையும் ஆய்வறிக்கை பரிந்துரைத்துள்ளது.

இதில் வரும் நிதி ஆண்டில் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் என்றும், கடனுக்கான வட்டி விகிதம் குறையும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதார ஆய்வறிக்கையை மக்களவையில் வியாழக்கிழமை மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தாக்கல் செய்தார். அதில் உள்ள சிறப்பம்சங்கள் வருமாறு:

நடப்பு ஆண்டில் நாட்டின் நிதிப் பற்றாக்குறை ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 4.6 சதவீதமாக இருக்கும். இதை வரும் நிதி ஆண்டில் 4.1 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது. பட்ஜெட்டுக்கு முந்தைய நிகழ்வாக பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் குறிப்பிட்ட முக்கிய கருத்துகள் பட்ஜெட் தயாரிப்புக்கு பெரிதும் உதவியது என்று பிரணாப் குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார வளர்ச்சி கடந்த நிதி ஆண்டில் 6.9 சதவீதமாக உள்ளது. இது வரும் நிதி ஆண்டில் (2012-13) 7.6 சதவீதமாகவும், 2013-14-ம் நிதி ஆண்டில் 8.6 சதவீதமாகவும் உயரும்.

பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் அதேவேளையில் கடனுக்கான வட்டி விகிதத்தை ரிசர்வ் வங்கி குறைக்கும். பணவீக்கம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுவதால் வட்டி குறைப்பு சாத்தியமே. இதனால் முதலீடுகள் அதிகரிக்கும்.

உள்நாட்டில் நிதி வளத்தை மேலும் அதிகரிக்க நடவடிக்கை தேவைப்படுகிறது. குறிப்பாக நிறுவனங்கள் வெளியிடும் கடன் பத்திரங்கள், பங்குச் சந்தை முதலீடு, ஆகியவற்றுக்கு நீண்ட கால அடிப்படையில் நிதி தேவைப்படுகிறது. அதேபோல அடிப்படைக் கட்டமைப்புத்துறையில் நீண்ட கால முதலீடு தேவைப்படுகிறது. இதற்கான நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன என்றும் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் என்றபோதிலும் முதலீடுகளின் அளவு குறைந்துள்ளதை ஆய்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. கடன் வாங்கும் அளவு அதிகரித்ததால் வட்டி விகிதம் உயர்ந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது. அதிக வட்டிக்குக் கடன் வாங்குவது மற்றும் பிற பொருள்களின் விலை உயர்வு ஆகியவை உள்நாட்டு நிதி வளத்தை பாதிக்கும்.

இந்திய பொருளாதார வளர்ச்சியில் காணப்படும் மந்த நிலைக்கு சர்வதேச அளவில் நிகழும் பிற சூழ்நிலைகள்தான் காரணம். அதேசமயம், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கி பணப்புழக்கத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்தது, முதலீடுகள் குறைந்தது, தொழில்துறை உற்பத்தி குறைந்தது ஆகியவை முக்கியக் காரங்களாகும். இப்போது அதிகரித்துள்ள பணவீக்கம், ஆண்டு இறுதியில் மேலும் குறைவதற்கான சமிக்ஞைகள் தென்படுகின்றன. 2012 ஜனவரியில் ஒட்டுமொத்த உணவுப் பணவீக்க விகிதம் 1.6 சதவீதமாக இருந்தது. இது 2010 ஜனவரியில் 20.2 சதவீதமாக இருந்ததையும் ஆய்வறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

உலகின் அதிவேகமாக வளரும் பொருளாதாரத்தைக் கொண்ட இந்தியாவின் கடனை திரும்பச் செலுத்தும் திறன் கணிசமாக அதிகரித்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.

ஏற்றுமதி அதிகரிக்கும்: வரும் நிதி ஆண்டில் ஏற்றுமதி 40 சதவீத அளவுக்கு அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதேசமயம் இறக்குமதி 30 சதவீதம் உயரும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அன்னியச் செலாவணி கையிருப்பு அதிகரிக்கும். இத்தொகை நாட்டின் ஒட்டுமொத்த வெளிநாட்டுக் கடனை அடைப்பதற்குப் போதுமானதாக இருக்கும்.

நாட்டின் உணவு உற்பத்தி 25 கோடி டன்னாக உயரும். இதில் பெருமளவு அரிசி உற்பத்தியாக இருக்கும்.

வேளாண் மற்றும் சேவைத்துறை செயல்பாடு சிறப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொழில்துறை உற்பத்தி 4 சதவீதம் முதல் 5 சதவீதம் உயரும். அதுவும் பொருளாதார மீட்சியடையும்போது சாத்தியமாகும்.

சர்வதேச அளவிலான பொருளாதாரம் கணிக்க முடியாததாகவே இருக்கும். இந்த விஷயத்தில் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. அதேசமயம் உன்னிப்பாக கவனிக்க வேண்டியதும் அவசியம்.

எரிசக்தியில் பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பை உருவாக்குவது போன்ற நடவடிக்கைகள் மிகவும் அவசியம். சர்வதேச பொருளாதாரத்தில் இந்தியாவின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். கடந்த 20 ஆண்டுகளில் (1990-2010) இந்திய ஏற்றுமதி மூன்று மடங்கு உயர்ந்துள்ளது.

சேமிப்பு மீதான வட்டியை அதிகரிப்பதன் மூலம் நிதி வளத்தை மேம்படுத்தலாம். அதற்கேற்ப கடன் கொள்கை வகுக்கப்பட வேண்டும். ஸ்திரமான வளர்ச்சி மற்றும் பருவநிலை மாறுபாடு ஆகியவை சர்வதேச பிரச்னையாக இருந்தாலும் அது இந்தியாவையும் பாதிக்கும் விஷயமாகும். இதில் சர்வதேச சமூகத்துடன் இணைந்து இந்தியாவும் செயல்பட வேண்டியது அவசியம் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பொதுபட்ஜெட்: வருமானவரி விலக்கு வரம்பு உயரக்கூடும்

First Published : 16 Mar 2012 02:22:46 AM IST

Last Updated : 16 Mar 2012 03:27:58 AM IST



பட்ஜெட்டுக்கு இறுதி வடிவம் கொடுக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி.

புது தில்லி, மார்ச் 15: நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி பொது பட்ஜெட்டை (2012 - 13) நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை தாக்கல் செய்கிறார். வருமான வரி செலுத்துவோருக்குச் சிறிது சலுகை காட்டும் வகையில் ஆண்டு வருமானம் ரூ.2 லட்சம் வரை பெறுவோர் வரி செலுத்தத் தேவையில்லை என்று அவர் அறிவிக்கக்கூடும்.

தங்களுடைய வருமானத்தில் 10%, 20%, 30% என்று வரி செலுத்துவோருக்கும் விலக்கு வரம்பு சிறிதளவு கூடும் என்று தெரிகிறது.

**கார்கள் மீது கூடுதல் வரி:** அதே சமயம் கார்கள் போன்ற விலை உயர்ந்த பொருள்கள் மீதான வரி சற்றே கடுமையாக உயர்த்தப்படக்கூடும் என்று தெரிகிறது.

மத்திய அரசின் வருவாயானது செலவைவிட எப்போதும் குறைவாகத்தான் இருந்து வருகிறது. இந்த முறை இந்த பற்றாக்குறை அரசு நிர்ணயித்த இலக்கைவிட அதிகமாகிவிட்டது.

அரசுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்று 40,000 கோடி ரூபாய் வரையில் திரட்ட கடந்த பட்ஜெட்டின்போது இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் முட்டி மோதி விற்றும் 14,000 கோடி ரூபாய்தான் திரட்ட முடிந்தது. எனவே அந்த ஒரு இனத்திலே கணிசமான பற்றாக்குறை இருக்கிறது.

மம்தா தந்த அதிர்ச்சி: ரயில்வே பட்ஜெட்டைத் தாக்கல் செய்தது தன்னுடைய கட்சிக்காரர்தான் என்றாலும் பயணக் கட்டணத்தை உயர்த்திய ஒரே காரணத்துக்காக அவரைப் பதவியிலிருந்து நீக்குமாறு பட்ஜெட் வெளியான ஒரு சில மணி நேரங்களுக்கெல்லாம் தில்லிக்கு தாக்கீது அனுப்பி அதிர்ச்சி ஏற்படுத்தியிருக்கிறார் திரிணமூல் காங்கிரஸ் தலைவரும் மேற்கு வங்க முதலமைச்சருமான மம்தா பானர்ஜி. அவரைச் சமாதானப்படுத்தும் பொறுப்பு நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியிடம்தான் விடப்பட்டது. எனவே புதன்கிழமை இரவு முழுக்க உறங்காமல் விழித்த அவர் தன்னுடைய பட்ஜெட்டில் எதையெல்லாம் மாற்றச் சொல்வார்களோ என்று கவலையுடன் இருக்கக்கூடும்.

வருமான வரிச் சட்டத்துக்குப் பதிலாக: 1961-ம் ஆண்டு இயற்றப்பட்ட வருமான வரிச் சட்டத்துக்குப் பதிலாக "நேரடி வரி வரைவு' (டிடிசி) அமலுக்கு வரவிருக்கிறது. ஆனால் இது 2013-14-ம் நிதி ஆண்டிலிருந்துதான் அமலுக்கு வருகிறது.

வரிகளை உயர்த்தியும் மானியங்களைக் குறைத்தும் நிதி பற்றாக்குறையைக் குறைக்கலாம் என்றாலும் வெகு விரைவிலேயே மக்களவைக்கு பொதுத் தேர்தல் நடைபெறலாம் என்ற பேச்சு அடிபடுகிறது. இதுவரை நடந்த மாநில சட்டப் பேரவைத் தேர்தல்களில் பெரிய மாநிலங்களில் எல்லாம் ஆளும் கூட்டணி தோல்வி கண்டுவருகிறது. இதே கூட்டணி இப்படியே நீடித்தால் அடுத்த முறை ஆட்சிக்கு வருவதே சந்தேகம் என்ற நிலைமையே நிலவுகிறது.

**மக்கள் அலைக்கழிப்பு:** இந்த அரசின் அரசியல் முடிவுகளும் பொருளாதாரக் கொள்கைகளும் மக்களை மிகவும் அலைக்கழித்து வருகின்றன. இந்த நிலையில் பொது பட்ஜெட்டில் வரிகளைக் கடுமையாக விதித்தால் முதலில் பட்ஜெட்டே நிறைவேற முடியாதபடி தோழமைக் கட்சிகளே நெருக்குதலைத் தொடங்கிவிடும். பொருளாதாரச் சீர்திருத்தம் என்ற பெயரில் உலக வங்கி, பன்னாட்டுச் செலாவணி நிதியம், மேற்கத்திய நாடுகளின் பன்னாட்டு நிறுவனங்கள் கூறிய யோசனைகளை அமல்படுத்தியதால் மக்களிடம் ஆதரவு குறைந்து வருகிறது.

உயர்ந்துவரும் விலைவாசியைக் குறைக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் முழு மனதோடு அமையாததால் ஏழைகள் படும் துயரம் சொல்லி மாளாமல் இருக்கிறது.

பெட்ரோல், டீசல் விலை உயர்வு: பெட்ரோல், டீசல் போன்றவற்றை இறக்குமதி செய்துதான் பயன்படுத்துகிறோம் என்று தெரிந்தும் ஏராளமான டூ வீலர்கள், கார்கள் தயாரிக்கப்படவும் விற்கப்படவும் அனுமதித்ததன் விளைவாக இப்போது உலகிலேயே இந்தியாவில்தான் சீனாவுக்கு அடுத்தபடியாக பெட்ரோலியப் பண்டங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. கோடிக்கணக்கான ரூபாய் அன்னியச் செலாவணி இதற்கே வீணாகிறது. இதை ஆரம்பித்திலேயே உணர்ந்து தடுத்திருக்க வேண்டிய அரசு, மோட்டார் வாகனத் தொழிலில் வேலைவாய்ப்புகள் குவிவதாக மகிழ்ச்சியடைந்து இப்போது விழி பிதுங்கி நிற்கிறது.

**எதிர்கால ஊக வியாபாரம்:** எதிர்காலத்துக்கான ஊக வியாபாரத்தையும் அனுமதித்ததால் பதுக்கல் சட்டப்பூர்வமாகி மக்களுக்கு எந்த அத்தியாவசியப் பொருளும் விலை அதிகம் தந்தால்தான் கிடைக்கிறது என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

கல்வி, சுகாதாரம் ஆகியவற்றையும் தரமாகப் பெறுவதற்கு தனியார்களைத்தான் நாட வேண்டியிருக்கிறது.

இந்த நிலையில் சில்லறை வர்த்தகத்திலும், இன்சூரன்ஸ் துறையிலும் அன்னிய நேரடி முதலீட்டை அதிகப்படுத்தவும், தொழிலாளர் சட்டங்களைத் திருத்தி பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களுக்குச் சாதகமாக்கவும் அரசால் முடியாமல் தடைபட்டிருக்கிறது.

இந்த நிலையில்தான் பொது பட்ஜெட் தாக்கலாகிறது. எனவே வழக்கம்போல சில வறுமை ஒழிப்பு திட்டங்களுக்கும் கல்வி, சுகாதாரம், கிராமப்புற வளர்ச்சி, வேலைவாய்ப்பு உறுதி திட்டம் போன்றவற்றுக்குக் கடந்த பட்ஜெட்டுகளில் செய்யப்பட்ட ஒதுக்கீட்டைவிட சில நூறு கோடிகளை அதிகப்படுத்தி வளர்ச்சிக்கு வித்திட்டுவிட்டதாகக் காட்ட முயற்சிக்கப்படும்.

6.9% பொருளாதார வளர்ச்சி: பொருளாதார வளர்ச்சி இப்போது 6.9% ஆகத்தான் இருக்கிறது. இதிலும் விவசாயம், சேவை ஆகிய துறைகளால்தான் இந்தச் சாதனையை எட்ட முடிந்திருக்கிறது. 9% என்ற இலக்கை எட்ட முடியவில்லை.

அதே சமயம் பணவீக்க விகிதம் 9% என்ற அளவை நெருங்கிக் கொண்டிருக்கிறது. எனவே பண சப்ளை கொள்கையை மட்டும் கொண்டு நிலைமையைச் சமாளிக்க முடியாது என்ற ஞானம் வெகு தாமதமாகவே அரசுக்கு உதித்திருக்கிறது.

வங்கிகளின் வட்டி வீதத்தை உயர்த்திக் கொண்டே வந்ததால் தொழில் உற்பத்தி முடங்கியது. இப்போது வட்டியைக் குறைத்தும் ரொக்கக் கையிருப்பு விகிதத்தைக் குறைத்தும் தொழில்துறைக்கு லேசான ஊக்குவிப்புகள் அளிக்கப்படுகின்றன.

புதிய பட்ஜெட்டால் பெரிய சாதனைகளைச் செய்துவிட முடியாது என்றாலும் ""வளர்ச்சிக்கான பட்ஜெட்'' என்ற பெயரில் வாக்குகளைக் கவரும் கவர்ச்சி திட்டங்களுக்கு அதிகம் செலவிடக்கூடிய சூழலும் காணப்படுகிறது. ஆளும் காங்கிரஸ் கட்சியைவிட தோழமைக் கட்சிகளுக்கு தேர்தலை நினைத்தாலே அடிவயிறு கலங்குவதால் கடுமையான வரி விதிப்புகளோ, துணிச்சலான பொருளாதார முடிவுகளோ நிச்சயம் இருக்காது.

## எண்ணெய்ப் பனை விவசாயிகளுக்கு பயிற்சி

First Published : 15 Mar 2012 11:37:29 AM IST

கரூர், மார்ச் 14: நிகழாண்டுக்கான ஐசோபாம் எண்ணெய்ப் பனை விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு கிருஷ்ணராயபுரம் வட்டாரம், போத்துராவுத்தன்பட்டியில் அண்மையில் நடைபெற்றது. வேளாண் துணை இயக்குநர் (பொ) ஜெயந்தி தலைமை வகித்தார். போத்துராவுத்தன்பட்டி ஊராட்சித் தலைவர் ரூபா செந்தில்குமார், ஊராட்சி துணைத் தலைவர் காந்திமதி பழனிச்சாமி உள்ளிட்டோர் பேசினர்.

எண்ணெய்ப் பனை சாகுபடியில் நவீன சாகுபடித் தொழில்நுட்பங்கள் குறித்து காவேரி ஆயில் பாம் நிறுவன மேலாளர் அசோகன் விளக்கினார். எண்ணெய்ப் பனை சாகுபடியில் பராமரிப்பு மானியம் பற்றி விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இதில் பங்கேற்ற அனைவருக்கும் எண்ணெய் பனை சாகுபடி பற்றிய கையேடுகள் வழங்கப்பட்டன. பின்னர் தாதம்பட்டி மணியின் எண்ணெய் பனை வயலுக்கு விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

ஏற்பாடுகளை வேளாண் உதவி அலுவலர்கள் விஜயகுமார், முருகானந்தம், காவேரி ஆயில் பாம் மருவீ ஆகியோர் செய்தனர்.

## மகசூலும் குறைவு; விலையும் குறைவு: மணிலா விவசாயிகள் ஏமாற்றம்

First Published : 15 Mar 2012 02:43:08 PM IST

கடலூர், மார்ச் 14: கடலூர் மாவட்டத்தில் மணிலா அறுவடை தொடங்கி இருக்கிறது. ஆனால் மகசூல் குறைவு மற்றும் நியாயமான விலை கிடைக்காததால், விவசாயிகள் பெரிதும் ஏமாற்றம் அடைந்து உள்ளனர்.

கடலூர், விழுப்புரம் மாவட்டங்கள் ஒருங்கிணைந்த தென்னார்க்காடு மாவட்டமாக இருந்தபோது மணிலா மாவட்டம் என்று அழைக்கப்படுவது உண்டு. அப்போது சுமார் 5 லட்சம் ஏக்கரில் தென்னார்க்காடு மாவட்டத்தில் மணிலா பயிரிடப்பட்டது. ஆனால் இந்த நிலை மிகவும் மோசம் அடைந்து, இப்போது இரு மாவட்டங்களிலும் சேர்த்தே சுமார் 75 ஆயிரம் ஏக்கரில்தான் மணிலா பயிரிடப்படுகிறது. வான்மழை பொய்த்து விடுவதும், மத்திய அரசு, எண்ணெய் வித்துகள் உற்பத்தியில் கவனம் செலுத்தாமல், சமையல் எண்ணெய் இறக்குமதியில் அதிக கவனம் செலுத்தியதுமே, மணிலா உள்ளிட்ட எண்ணெய் வித்துகள் பயிரிடும் பரப்பளவு, நாளுக்கு நாள் குறைந்துவருவதற்குக் காரணம் என்கிறார்கள் வேளாண் அலுவலர்கள்.

கடலூர் மாவட்டத்தில் கார்த்திகை பட்டத்தில் பெருவாரியாக மணிலா பயிரிடப் படுகிறது. இப்பருவத்தில் பொதுவாக 25 ஆயிரம் ஏக்கரில் கடலூர் மாவட்டத்தில் மணிலா பயிரிடப்படுவதாக வேளாண் துறை தெரிவிக்கிறது. இந்த ஆண்டு வழக்கம்போல் மணிலா பயிரிடப்பட்டும், புயல் பாதிப்பு குறுக்கிட்டதால் விவசாயிகளை பெரிதும் பாதிப்புக்கு உள்ளாக்கி இருக்கிறது.

பாதிக்கப்பட்ட மணிலா பயிருக்காக 3,750 ஏக்கருக்கு அரசு நிவாரணம் வழங்கப்பட்டு இருக்கிறது. மீதம் உள்ள நிலங்களில் பயிரிடப்பட்டு இருந்த மணிலா அறுவடை, இப்போது தொடங்கி இருக்கிறது. கடலூர் மாவட்டத்தில் ஏக்கருக்கு 12 மூட்டை (80 கிலோ மூட்டை) உடைத்த மணிலா பயறு கிடைக்கும். ஆனால் இப்போது நடந்துவரும் அறுவடையில், பெரும்பாலான பகுதிகளில் ஏக்கருக்கு 6 மூட்டைகள் மட்டுமே கிடைத்து இருப்பதாக, விவசாயிகள் புலம்புகிறார்கள்.

புயல் தாக்குதலுக்குப்பின் சுமார் 20 நாள்கள் மின்சாரம் இல்லாததால், இறவை மணிலா காயும் அபாயம் ஏற்பட்டது. அதிக பாதிப்பு உள்ள பகுதிகளில் ஆயில் என்ஜின் வைத்து தண்ணீர் வழங்க, மாவட்ட ஆட்சியர் ராஜேந்திர ரத்னூ நடவடிக்கை மேற்கொண்டார். அதன்பிறகு மணிலா பயிர் செழிப்புடன் காணப்பட்டது. எனினும் புயலின் தாக்கம் மணிலா மகசூலை பெரிதும் பாதித்து இருப்பதையே, அறுவடை முடிவு எடுத்துக்காட்டுகிறது என்கிறார்கள் விவசாயிகள்.

கடலூர் மாவட்டத்தில் மணிலா பயறு பெரும்பாலும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலேயே விற்பனை செய்யப்படுகின்றன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, இந்த ஆண்டு இப்போது மணிலா வரத்து குறைவாக இருப்பதாகவும் இனிமேல் வரத்து அதிகரிக்கலாம் என்றும், மார்க்கெட் கமிட்டி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பொதுவாக மார்க்கெட் கமிட்டிகளுக்கு மணிலா வரத்து குறைவாக இருந்தால் விவசாயிகளுக்கு விலை சற்று கூடுதலாகக் கிடைக்கும். ஆனால் இந்த ஆண்டு விலையும் குறைவாகக் கிடைப்பதாக விவசாயிகள் கூறுகிறார்கள்.

கடந்த வாரம் மூட்டைக்கு (80 கிலோ) ரூ. 5,500 வரை விலை கிடைத்து வந்தது இந்த வாரத்தில் ரூ. 4,800 வரை சரிந்துவிட்டது. கடந்த ஆண்டு மூட்டை ரூ. 5,300க்குக் குறையவே இல்லை. மணிலா அறுவடை தொடங்கியபோது வெளி மாவட்ட வியாபாரிகள் வந்து, மணிலா கொள்முதல்

செய்தனர். இதனால் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைத்தது. ஆனால் அதற்குள் உள்ளூர் தரகர்கள், வியாபாரிகள் என்ற பெயரில் மார்கெட் கமிட்டிகளில் புகுந்து, வெளிமாவட்ட வியாபாரிகளை, உள்ளே வரவிடாமல் செய்து விட்டனர். தற்போது இடைத்தரகர்கள் குறைந்த விலைக்கு மணிலா கொள்முதல் செய்து, வெளியூர் வியாபாரிகளுக்கு அனுப்பி நல்ல ஆதாயம் பார்க்கிறார்கள் என்கிறார் மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்பின் தலைவர் பி.ரவீந்திரன்.

மாவட்ட மார்க்கெட் கமிட்டி செயலாளர் அருள்பிரகாசம் கூறுகையில், புயல் பாதிப்பால் தரம் குறைந்த மணிலாதான், மூட்டை ரூ. 4,700க்கு விலை போகிறது. தரமான மணிலாவுக்கு 5,400 வரை விலை கிடைக்கிறது. வெளிமாவட்ட மணிலா எண்ணெய் நிறுவனங்கள், ஆள்கள் மூலம் கொள்முதல் செய்கின்றன. விலையை அவர்கள்தான் நிர்ணயிக்கிறார்கள் என்றார்.

## முந்திரி சாகுபடி கருத்தரங்கம்

First Published : 15 Mar 2012 02:38:37 PM IST

விருத்தாசலம், மார்ச் 14: விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை முந்திரி சாகுபடி கருத்தரங்கம் நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலையம் மற்றும் கொச்சி முந்திரி, கோகோ மேம்பாட்டு இயக்குநரகம் சார்பில், விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில், முந்திரி விவசாயிகளுக்கான முந்திரி சாகுபடி கருத்தரங்கம் நடைபெற்றது.

முந்திரி உயர் விளைச்சல் ரகங்கள், நெருக்கு நடவு, கவாத்து முறை, முந்திரி ஊடுபயிர், முந்திரியில் நீர் சேமித்தல் உள்ளிட்ட தலைப்புகளில் விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் புருஷோத்தமன் வரவேற்றார். மண்டல ஆராய்ச்சி நிலையத் தலைவர் முனைவர் ரா.வைத்தியநாதன் தலைமை ஏற்றார்.

கடலூர் வேளாண்மை இணை இயக்குநர் ராதாகிருஷ்ணன் கருத்தரங்கை தொடங்கிவைத்தார். வேளாண்மை அறிவியல் நிலையத் தலைவர் முனைவர் சுப்பிரமணியன் முந்திரி சாகுபடி குறித்த கையேட்டை வெளியிட்டார். கனகசபை, அசோகன், ராஜகோபாலன், நாராயணசாமி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் ஜீவா நன்றி கூறினார்.

## பவானிசாகர் அணையின் நீர்மட்டம்

First Published : 15 Mar 2012 09:54:00 AM IST

ஈரோடு, மார்ச் 14: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 66.25 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 337 கன அடி தண்ணீர் வந்தது.

அணையில் இருந்து ஆற்றில் 600 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 9.4 டி.எம்.சி.

ஸ்ரீவெங்கடேஸ்வரா பள்ளி மாணவர்கள் சாதனை

கோபி, மார்ச் 14: இந்தியன் ஒலிம்பிக் சங்கம் நடத்திய கராத்தே போட்டியில் கோபி ஸ்ரீ வெங்கடேஸ்வரா இண்டர்நேஷனல் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு கருப்பு பட்டைகள் பெற்று சாதனை படைத்தனர்.

÷இப்போட்டியில் 79 மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். இதில் ஏழாம் வகுப்பு பயிலும் மாணவி யு.எஸ்.ஆர்த்தி கருப்பு பட்டையை இரண்டாம் முறையாக பெற்றார்.

மாணவர் கிரண்உமேஷ் முதல் முறையாக கருப்பு பட்டையை பெற்றார்.

÷போட்டியில் பங்கு பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் பள்ளி செயலர் ஜி.பி.கெட்டிமுத்து சான்றிதழ் வழங்கி பாராட்டின

ôர் (படம்).

## கரும்பு சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி

First Published : 15 Mar 2012 12:11:15 PM IST

பெரம்பலூர், மார்ச் 14: பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி மையத்தில் விவசாயிகளுக்கான நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

கோவை வேளாண் பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குனரகம், சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையம் சார்பில், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்தப் பயிற்சியை, சிறுகமணி கரும்பு ஆராய்ச்சி நிலைய தலைவர் மனோகரன் தொடக்கிவைத்தார்.

நவீன கரும்பு சாகுபடி முறைகள், இளம் நாற்றுக்களை எடுத்து நடவு செய்தல், வயல்களில் அதிக இடைவெளிவிட்டு நடவு செய்தல் உள்ளிட்ட பல்வேறு தொழில் நுட்பங்கள் குறித்து பேராசிரியர் பன்னீர்செல்வம், உதவிப் பேராசிரியர் ஆனந்த் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

இதில் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத் தலைவர் சகுந்தலா, பெரம்பலூர் சர்க்கரை ஆலை கரும்பு வளர்ச்சி அலுவலர் ரவிச்சந்திரன், கரும்பு அலுவலர்கள் செல்வராஜ், அருள்நம்பி,

கரும்பு ஆய்வாளர்கள் எம். வீரபாண்டியன், ராமமூர்த்தி, ராஜேந்திரன், சிவமூர்த்தி, தங்கவேல், கோவிந்தசாமி, பொன்னுசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை, வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலையத் தலைவர் கவிமணி செய்திருந்தார். பேராசிரியர் சிந்தியா வரவேற்றார். பாரதி பாஸ்கர் நன்றி கூறினார்.

## கொப்பரை விற்பனை செய்ய அடையாள அட்டை விநியோகம்

First Published : 15 Mar 2012 11:09:14 AM IST

காங்கயம், மார்ச் 14: காங்கயத்தில் கொப்பரை கொள்முதல் மற்றும் விற்பனை செய்ய அடையாள அட்டை விநியோகம் தொடங்கியுள்ளது.

இதுகுறித்து காங்கயம் வேளாண்மை உதவி இயக்குநர் ஆர்.மாணிக்கம் தெரிவித்தது: காங்கயம் வட்டாரத்தில் தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கத்தின் மூலம், கொப்பரை விற்பனை செய்ய தேவையான அடையாள அட்டைகள் வழங்கப்பட உள்ளது.

அடையாள அட்டை வேண்டுவோர், உரிய ஆவணங்கள், இரண்டு பாஸ்போர்ட் அளவு புகைப்படங்களுடன், காங்கயம் வட்டார வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

---

தினமலர்

உண்மையின் உரைகல்

## பொருளாதார ஆய்வறிக்கையில் மதிப்பீடு : நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மந்த நிலை

மார்ச் 16,2012,00:23



புதுடில்லி : ஒவ்வொரு ஆண்டும், மத்திய பட்ஜெட்டிற்கு முன்பாக சமர்ப்பிக்கப்படும், பொருளாதார ஆய்வறிக்கையை மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்று பார்லிமென்டில் தாக்கல் செய்தார்.

நடப்பு 2011-12ம் நிதியாண்டில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி 6.9 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, வரும் 2012-13ம் நிதியாண்டில், 7.6 சதவீதமாகவும், 2013-14ம் நிதியாண்டில், 8.6 சதவீதமாக இருக்கும் என முகர்ஜி தெரிவித்தார்.

சர்வதேச சூழ்நிலைகளால், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட நிதி நெருக்கடி இந்திய பொருளாதார வளர்ச்சியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலும், நடப்பு நிதியாண்டின் பெரும்பாலான மாதங்களில் நாட்டின் பணவீக்கம் அதிகரித்து காணப்பட்டது. இது போன்ற காரணங்கள், ஒட்டுமொத்த அளவில், பொருளாதார வளர்ச்சியிலும், தொழில் துறை உற்பத்தியிலும் தேக்க நிலையை ஏற்படுத்தியது.

பணவீக்கத்தை கட்டுக்குள் கொண்டு வருவதற்காக, ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கான "ரெப்போ ரேட்' விகிதங்களை உயர்த்தியது. இதனால், நிறுவனங்கள் அவற்றின் விரிவாக்க நடவடிக்கைகளுக்கு தேவையான நிதி ஆதாரங்களை திரட்டிக் கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதுவும், தொழில் துறை உற்பத்தி வளர்ச்சியில் பின்னடைவை உருவாக்கியது.

**ஏற்றுமதி** : நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டில், நாட்டின் ஏற்றுமதி 40.50 சதவீதமும், இறக்குமதி 30.4 சதவீத அளவிற்கும் அதிகரித்திருந்தது. நடப்பு முழு நிதியாண்டில், தொழில் துறை உற்பத்தி வளர்ச்சி 4-5 சதவீதம் என்ற குறைந்த அளவிற்கே இருக்கும்.அதேசமயம், சேவை துறையின் வளர்ச்சி 9.4 சதவீதம் என்ற அளவிலும், வேளாண் துறையின் வளர்ச்சி 2.5 சதவீதம் என்ற அளவிலும் இருக்கும் என பொருளதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பொருளாதார ஆய்வறிக்கை** : பொருளாதார ஆய்வறிக்கை என்பது, குறிப்பிட்ட ஆண்டில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி, ஏற்றுமதி, அன்னிய முதலீடுகள், பணவீக்கம், வேளாண் மற்றும் உற்பத்தி துறைகளின் செயல்பாடு போன்றவை குறித்த தகவல்களை கொண்டதாகும். இந்த ஆய்வு அறிக்கைக்கு ஏற்ப, அடுத்த நிதியாண்டிற்கான பட்ஜெட்டில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். எனவே, பொருளாதார ஆய்வறிக்கையின் வாயிலாக, எதிர்வரும் மத்திய பட்ஜெட் எப்படி இருக்கும் என்பதை அறிந்து கொள்ள, இது ஓர் அளவு கோளாக கருதப்படுகிறது.

**ரூபாயின் வெளிமதிப்பு** : நடப்பு நிதியாண்டில், அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாயின் வெளிமதிப்பு அதிக ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டது. மாதாந்திர அடிப்படையில், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, டாலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு, 12.4 சதவீதம் சரிவடைந்துள்ளது. இதனால், இறக்குமதி செலவினம் அதிகரித்துள்ளது. குறிப்பாக, நடப்பு நிதியாண்டில் பங்கு வர்த்தகம் நன்கு இல்லாததால், அன்னிய நிதி நிறுவனங்கள் இந்திய பங்குச் சந்தைகளில் மேற்கொண்ட முதலீடு குறைந்து போனது. இதுவும், ரூபாயின் வெளிமதிப்பு சரிவிற்கு காரணம்.

**நிதிப் பற்றாக்குறை :** அரசின் செலவினம் அதிகரித்து, பட்ஜெட் மதிப்பீட்டை விட வருவாய் குறைந்ததால், நிதிப்பற்றாக்குறை உயர்ந்துள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக, நடப்பு நிதியாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் (ஜன., - டிச.,) மொத்த வரி வருவாய், 12.2 சதவீதம் என்றளவில்தான் வளர்ச்சி கண்டுள்ளது.

நடப்பு நிதியாண்டிற்கான பட்ஜெட் மதிப்பீட்டில், வரி வருவாய் வளர்ச்சி, 17.3 சதவீதமாக இருக்க வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதேபோன்று, நடப்பு நிதியாண்டில், அரசின் மொத்த செலவினம் 4.9 சதவீதம் என்றளவில் இருக்க வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், நடப்பு நிதியாண்டின் ஒன்பது மாத காலத்தில், செலவினம் 13.9 சதவீதம் என்ற அளவில் அதிகரித்துள்ளது. இதற்கு, திட்டமிடப்படாத அரசின் செலவினம் அதிகரித்ததுதான் முக்கிய காரணம் என ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான காலத்தில், அரசின் ஒட்டு மொத்த செலவினம், 8 லட்சத்து 96 ஆயிரத்து 361 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இது, நடப்பு முழு நிதியாண்டிற்கு, திட்டமிடப்பட்டிருந்த மொத்த செலவினமான, 12 லட்சத்து 57 ஆயிரத்து 729 கோடியில், 71.3 சதவீதமாகும்.

இதே காலத்தில், அரசின் மொத்த வருவாய், நடப்பு நிதியாண்டில், 7 லட்சத்து 89 ஆயிரத்து 892 கோடி ரூபாயாக இருக்குமென பட்ஜெட் மதிப்பீட்டில் கூறப்பட்டிருந்தது. ஆனால், நடப்பு நிதியாண்டின் முதல் ஒன்பது மாத காலத்தில், 4 லட்சத்து 98 ஆயிரத்து 491 கோடி ரூபாய் அளவிற்கே வருவாய் கிடைத்துள்ளது. இது, மொத்த பட்ஜெட் மதிப்பீட்டில், 63.1 சதவீதமாகும்.

நடப்பு முழு நிதியாண்டிற்கான வருவாய் பற்றாக்குறை : 3 லட்சத்து 7,270 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், முதல் ஒன்பது மாத காலத்திலேயே, வருவாய் பற்றாக்குறை 2 லட்சத்து 86 ஆயிரத்து 104 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது, மொத்த வருவாய் பற்றாக்குறையில் 93.1 சதவீதமாகும்.

இதே போன்று நிதி பற்றாக்குறையும், 4 லட்சத்து 12 ஆயிரத்து 817 கோடி ரூபாயாக இருக்குமென பட்ஜெட்டில் மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், முதல் ஒன்பது மாத காலத்தில், நிதி பற்றாக்குறை 3 லட்சத்து 81 ஆயிரத்து 12 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது, மொத்த பட்ஜெட் மதிப்பீட்டில், 92.3 சதவீதமாகும்.

**வேளாண் துறை :** வரும் 2012-13ம் நிதியாண்டில், நாட்டின் வேளாண் துறை உற்பத்தி, சிறப்பாக இருக்குமென ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் (2011-12), 25 கோடி டன் உணவு தானியங்கள் உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதேசமயம், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை நிலை நிறுத்திட பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும், செலவினங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, நாட்டிற்கு எவ்வித முன்னேற்றத்தையும் அளிக்காத தங்க இறக்குமதியை கட்டுப்படுத்த வேண்டும்.

அன்னிய நேரடி முதலீட்டை அதிகரிக்கும் வகையில், திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். மேலும், அன்னியச் செலாவணி கையிருப்பை அதிகரிக்கும் வகையில், வெளிநாடுகளிலிருந்து மூலதனத்தைப் பெறும் வகையில் திட்டங்கள் அமல்படுத்த வேண்டும். நாட்டின் பணவீக்கம் குறையும் நிலையில், ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை குறைக்க வேண்டும். ரியல் எஸ்டேட் மற்றும் கட்டுமானத் துறைகளில் அதிக கவனம் செலுத்தும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது : நாட்டின் பொருளாதார மந்த நிலையிலும், தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக, வேலை வாய்ப்புத் துறை வளர்ச்சி கண்டு வருகிறது. சென்ற 2011ம் ஆண்டு செப்டம்பர் வரையில் ஓராண்டு காலத்தில், 9 லட்சத்திற்கும் அதிகமான வேலை வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

இதில், தகவல் தொழில்நுட்பம் (ஐ.டி) மற்றும் பணிகளை வெளியிலிருந்து நிறைவேற்றித் தரும் பீ.பி.ஓ துறைகளில் மட்டும் 8 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாகியுள்ளது. அடுத்த இடங்களில் உலோகம் (1.07 லட்சம்), வாகனம் (71 ஆயிரம்), நவரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் (8,000), தோல் (7,000) ஆகிய துறைகளில் வேலை வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டமும், வேலை வாய்ப்பு வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது. கடந்த 2008ம் ஆண்டு அக்டோபர் முதல், 2011ம் ஆண்டு செப்டம்பர் வரை அனைத்து துறைகளிலும் 23.58 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

## உணவு பதப்படுத்துதல் தொழில் கருத்தரங்கு

பதிவு செய்த நாள் : மார்ச் 16,2012,04:00 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: தர்மபுரி அதியமான் பேலஸில் தேசிய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் நிறுவனம், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகம் சார்பில் உணவு பதப்படுத்துதல் தொழில் கருத்தரங்கு வரும் 20ம் தேதி நடக்கிறது.

கருத்தரங்கு இந்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகம் உதவியுடன் நடத்தப்படுகிறது. தொழில்கள் துவங்கும் போது, அரசின் திட்டங்களின் செயல்பாடுகள், உதவிகள், உணவு பதப்படுத்தும் துறØயில் உள்ள தொழில் வாய்ப்புகள், சமீபத்திய தொழில் நுட்ப வாய்ப்புகளை பயன்படுத்தி தொழில் துவங்கி பயன் அடைதல் குறித்து விளக்கம் அளிக்கப்படும். கருத்தரங்கின் ஒரு பகுதியாக உணவு பதப்படுத்துதல் பொருட்கள், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனங்கள் பல்கலைக்கழகங்களின் தொழில் நுட்பங்களின் கண்காட்சியும் நடக்கிறது. உணவு

பதப்படுத்தும் துறையில் தொழில்கள் துவங்குவோர், மாணவர்கள், ஆசிரியர்கள், வங்கியாளர்கள், தொண்டு நிறுவனங்கள் பங்கேற்கலாம். ஆர்வம் உள்ளவர்கள் உணவு பதப்படுத்தும் பொருட்களை கண்காட்சியில் பார்வைக்கு வைக்கலாம்.

மேலும் தகவல் பெறவும், பதிவு செய்யவும், மோகன்ராம், தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி நிறுவனம், டி.ஏ.எம்.எஸ்., காலனி இலக்கியம்பட்டி என்ற முகவரியிலும் 098425 56130 என்ற ஃபோன் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

## நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2012,23:23 IST

ஆனைமலை : ஆனைமலை அருகே விவசாயிகளுக்கு நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சியளிக்கப்பட்டது.ஆனைமலை அடுத்த பெரியபோது ஊராட்சியில் வேளாண்மைத்துறை சார்பில் நிலக்கடலை சாகுபடி குறித்த தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடந்தது. பொள்ளாச்சி விதைச்சான்று அலுவலர் இளங்கோ தரமான விதை உற்பத்தி பற்றி பயிற்சியளித்தார்.

பயிற்சியில் ரகங்கள் தேர்வு, விதை அளவு மற்றும் விதை நேர்த்தி, உயிர் உரங்கள் இடுதல், நுண்ணூட்டச்சத்து இடுதல், உர நிர்வாகம், பயிர் இடைவெளி, பயிர் எண்ணிக்கை, ஜிப்சம் இடுதல், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து தெளிப்பு, களை நிர்வாகம், ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு, பூச்சி நிர்வாகம், நோய் நிர்வாகம் ஆகியவை குறித்து விளக்கப்பட்டது.

ஊராட்சி தலைவர் பத்மநாபன், ஊராட்சி செயலாளர் சிவக்குமார் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் பூபதி, ஜாபர் அலி, செல்வக்குமார் செய்திருந்தனர்.

## காலாவதி விதைகளை விற்றால் நடவடிக்கை'

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2012,23:18 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை : "விதை விற்பனையாளர்கள் விதை வணிக உரிமம் இல்லாமலும், காலக்கெடு முடிந்த விதைகளையும் விற்பனை செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும்' என, கோவை விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று துறை எச்சரித்துள்ளது.

கோவை விதை ஆய்வு துணை இயக்குனர் பொன்னுச்சாமி நடேசன் அறிக்கை:கோவை, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ள அனைத்து விதை விற்பனையாளர்கள் தங்கள் விதை விற்பனை உரிமம் காலாவதியாகும் முன்பே புதுப்பித்துக்கொள்ள வேண்டும்; விதை வணிக உரிமம் மூன்றாண்டுகளுக்கு செல்லத்தக்கது.
புதுப்பித்தலுக்கு உரிய கணக்கு தலைப்பில் 20 ரூபாய் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.
உரிமம் இல்லாமலோ, புதுப்பிக்காமலோ விதை விற்பனை செய்தால், விதை கட்டுப்பாடு ஆணை -1983ன் படி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
விதை விற்பனை செய்யும்போது, ரசீதில் விதை வாங்கும் விவசாயியின் பெயர், ரகம், முழு முகவரி, பயிர், ரகத்தின் பெயர், குவியல் எண், காலாவதி தேதி, விவசாயியின் கையொப்பம், விற்பனையாளரின் கையொப்பம் இருப்பது அவசியம். ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்குள் விதை இருப்பு மற்றும் விற்பனை விபரங்களை உரிய படிவத்தில் கோவை விதை ஆய்வு துணை இயக்குனர் அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும்.
விதை மாதிரிகளை விதை பரிசோதனை நிலையத்துக்கு அனுப்பி, தரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். காலாவதியான விதைகளை இருப்பு வைத்தாலோ, விற்பனை செய்தாலோ சட்டப்படி குற்றமாகும்.இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விதை உற்பத்தியில் கலப்பு தவிர்ப்பது எப்படி?

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2012,23:18 IST

கருத்தை பதிவு செய்ய
கோவை : விதை உற்பத்தியில் கலப்பினைத் தவிர்க்க, உற்பத்தியாளர்கள் செய்ய வேண்டிய வழிமுறைகள் குறித்து, விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்றுத் துறை அறிவுறுத்தியுள்ளது.
விதைச் சான்று துறை அறிக்கை:உற்பத்தி செய்யப்படும் விதைகள் தரமானதாக இருக்க வேண்டும். உற்பத்தியாளர்கள் தாங்கள் கையாளும் தொழில்நுட்பங்களை நன்றாக அறிந்து கொண்டு செயல்பட்டால், தரமான விதைகள் விதைப்புக்கு கிடைக்கும்.
அதிகமான முளைப்புத் திறன், அளவான ஈரப்பதம், இனத்தூய்மை, புறத்தூய்மை உள்ளது, பூச்சி, நோய் தாக்குதல் இல்லாதது போன்ற குணாதிசயங்கள் மூலம், நல்ல விதைகளை காணலாம்.
சான்று விதைகளை விதைப்புக்கு பயன்படுத்துவதால், நல்ல முளைப்புத்திறன், தேவையான பயிர் எண்ணிக்கை, சீரான பயிர் வளர்ச்சி, ஒரே நேரத்தில் பூத்து முதிருதல், ஒரே நேரத்தில் அறுவடை செய்தல், கலப்படமில்லாத அதிக மகசூல், விளைபொருளுக்கு நியாயமான விலை போன்ற நன்மைகள் கிடைக்கின்றன.
நெல் பயிரில், கலவன்களை தகுந்த நேரத்தில் தகுந்த முறையில் நீக்கினால் மட்டுமே,

விதைத்தரத்தை வயலில் பேணிக்காக்க முடியும். கலவன்கள் வயலில் ஏற்படாமல் இருக்க, சான்று செய்யப்பட்ட விதைகளை, அரசு அங்கீகாரம் பெற்ற விற்பனை மையங்களில் வாங்க வேண்டும். நெல் மூட்டைகள் ஒரே ரகமாக இருக்க வேண்டும். இரண்டு அல்லது அதற்கு மேல் ரகங்கள் வாங்கும் போது, தனியாக வைத்து பயன்படுத்தலாம். நாற்று விடும்போது ரகங்கள் கலந்து விடாமல் இருக்க, வெவ்வேறு நாட்கள் மற்றும் இடங்களில் நாற்று நடலாம். நடவு முடிந்து மீதமாகும் நாற்றுகளையும், அகற்றப்பட்ட கலவன்களையும் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். ரகங்களை தனித்தனியே அறுவடை செய்து, கதிரடித்து, காயவைக்க வேண்டும். கதிரடிக்கும் இடத்தை, முழுமையாக சுத்தம் செய்து, நன்கு காய வைத்து விதைகளை, புதிய பைகளில் மட்டுமே சேமிக்க வேண்டும். மூட்டைகளின் மேல், ரகத்தினைத் தெளிவாகக் குறிப்பிட்டு, ரக வாரியாக தனி அறையில் வைக்க வேண்டும். சுத்திகரிப்பு பணிக்கு முன், இயந்திரத்தை முழுமையாக சுத்தம் செய்து, முதலில் வெளிவரும் நெல் விதைகளில் அரை மூட்டை வரை விதைக்காக பயன்படுத்தாமல், கழிவு நெல்லுடன் சேர்க்க வேண்டும். இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விளைநிலங்களுக்கு தாவர வேலி தோட்டக்கலைத்துறை அறிவுரை

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2012,23:45 IST

உடுமலை : விளைநிலங்களுக்கு தாவர வேலி அமைப்பதன் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும் என தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:உடுமலை வட்டாரத்தில், விளைநிலங்களுக்கு கருங்கல் வைத்து கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது. இந்த முறையால் விவசாயிகளுக்கு செலவினம் அதிகரிக்கிறது. மாற்றாக, விளைநிலங்களுக்கு தாவரவேலியாக மூங்கில் நாற்றுகளை நடவு செய்யலாம். மூங்கிலை வரப்பு ஒரங்களில் நடவு செய்வதால், காற்று தடுப்பானாக செயல்படுகிறது. விளைபயிர்களுக்கு வெப்பத்தை குறைக்கவும் மூங்கில் உதவுகிறது.

முள் இல்லா மூங்கில் ரகத்தை வேலியாக நட்டு பராமரித்தால் விவசாயிகளுக்கு வருமானமும் கிடைக்கிறது. தோட்டக்கலைத்துறை சார்பில் முள் இல்லா மூங்கில் ரகங்களை வளர்ப்பவர்களுக்கு மானிய உதவி வழங்கப்படுகிறது. "பயோ ஸ்டீல்' என அழைக்கப்படும் மூங்கில் இரும்புக்கு மாற்றாக பல்வேறு இடங்களில் பயன்படுத்தப்படுகிறது.

மூங்கில் மரங்களிலிருந்து கீழே விழும் இலைகள் விளைநிலங்களில் ஈரப்பதம் விரைவாக ஆவியாவதை தடுக்கிறது. வரப்பு ஒரங்களில் 10 அடி இடைவெளிகளில் மூங்கில் நாற்றுகளை நடவு செய்யலாம்.

குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு பிறகு மூங்கிலை அறுவடை செய்வதால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். மேலும், விவரங்களுக்கு உடுமலை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் அலுவலகத்தை விவசாயிகள் அணுகலாம்.இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விலையும் இல்லை; மகசூலும் குறைவு; விவசாயிகள் கண்ணீர்**

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2012,23:40 IST

கருத்தை பதிவு செய்ய

திருப்பூர் : திருப்பூர் மாவட்டத்தில் 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள் ளது; அறுவடை பணிகள் தற்போது தீவிரமாக நடந்து வருகின்றன. ஆனால், வெங்காயத்துக்கு உரிய விலை கிடைக்காததோடு, இந்தாண்டு மகசூலும் குறைந்துள்ளதால் விவசாயிகள் பாதிக்கப் பட்டுள்ளனர்.

விவசாயிகள் கூறியதாவது:மூன்று மாத பயிரான வெங்காயம் சாகுபடிக்கு விதை, உரம், களை எடுத்தல், கூலி என ஏக்கருக்கு 55 ஆயிரம் ரூபாய் வரை செலவாகியுள்ளது. சாகுபடி செலவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 500 ரூபாய்க்கு விற்ற டி.ஏ.பி., மூட்டை 900 ரூபாய்க்கும், "15க்கு 15' மூட்டை 300 ரூபாய்க்கு விற்றது 700 ரூபாய் என இடுபொருட்கள் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஆட்கள் கூலியும் 200 ரூபாயில் இருந்து 400 ரூபாயாக உயர்ந்துள்ளது. சாகுபடி செலவு அதிகரித்துள்ள நிலையில், விளைவித்த வெங்காயம் தற்போது அறுவடை சமயத்தில் விலை வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

கடந்தாண்டு இதே சமயத்தில் ஒரு கிலோ 17 ரூபாய் வரை விற்றது. தற்போது, தரம் வாரியாக மூன்று ரூபாய் முதல் அதிகபட்சமாக எட்டு ரூபாய் வரை மட்டுமே விற்று வருகிறது. மழை குறைவு மற்றும் தேவையானபோது தண்ணீர் பாய்ச்ச முடியாமல் மின்வெட்டு ஏற்பட்டது; நோய் தாக்குதல் ஆகிய காரணங்களால் வெங்காயம் மகசூலும் இந்தாண்டு பாதியாக குறைந்துள்ளது. ஏக்கருக்கு 10 டன் வரை மகசூல் கிடைத்து வந்த நிலையில், தற்போது ஐந்து டன் மட்டுமே கிடைத்துள்ளது. அதிலும், அறுவடை செய்த வெங்காயத்தில், தரமானதை மட்டுமே வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். வெங்காயத்துக்கு விலை இல்லாததால், அறுவடைக்கு ஆகும் செலவும் கூட கிடைக்காத நிலை உள்ளதால், வயலிலேயே பலர் வெங்காயத்தை விட்டுள்ளனர்.

வெங்காயம் ஏற்றுமதியான சமயத்தில் விலை ஏறி வந்தது; தற்போது ஏற்றுமதி குறித்து மத்திய அரசு தெளிவான முடிவு அறிவிக்கவில்லை. இதனால், வியாபாரிகள் ஏற்றுமதி செய்ய முடிவதில்லை என்று கூறி விலையை குறைத்து வாங்குகின்றனர். வெங்காயத்திற்கு உரிய விலை கிடைக்க, மத்திய, மாநில அரசுகள், வேளாண் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர்.

வெங்காயத்தை உரித்தால் கண்ணீர் வரும்; ஆனால், தற்போது, வெங்காயம் சாகுபடி செய்தாலே கண்ணீர் வருவதாக விவசாயிகள் வேதனையோடு தெரிவித்தனர்.

## வரத்து அதிகரிப்பு; மணம் வீசும் பூக்கள்

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2012,23:35 IST

கருத்தை பதிவு செய்ய

திருப்பூர் : நிலக்கோட்டை, சத்தியமங்கலம் பகுதிகளில் இருந்து திருப்பூர் பூ மார்க்கெட்டுக்கு மல்லிகை, செவ்வந்தி உள்ளிட்ட அனைத்து பூக்களும் ஆறு டன் வரை வரத்து அதிகரித்துள்ளது. விலை குறைந்துள்ளதால், பூக்கள் வாங்க பெண்கள் கூட்டம் அலைமோதுகிறது.

திருப்பூர் பூ மார்க்கெட்டுக்கு நிலக்கோட்டை, சத்தியமங்கலம், மேட்டுப்பாளையம் பகுதிகளில் இருந்து மல்லிகை, முல்லை, சம்பங்கி, அரளி உள்ளிட்ட பூக்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. கடந்த மாதம் வரை தொடர்ந்த அதிக பனிப்பொழிவு காரணமாக, அழுகல், சேதம் அதிகரித்ததையடுத்து, செடிகளை

விவசாயிகள் வெட்டிவிட்டனர். வழக்கமாக 10 டன் வரை வரத்து இருக்கும் பூ மார்க்கெட்டுக்கு ஒரு டன்னாக பூக்கள் வரத்து குறைந்தது; விசேஷங்கள், கோவில் விழாக்கள் அதிகரித்திருந்ததால், பூக்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விலை உச்சம் பெற்றிருந்தது. அதிகபட்சமாக ஒரு கிலோ மல்லிகை பூ, 800 ரூபாய் வரை விற்கப்பட்டது.

இம்மாதம் துவக்கம் முதல் கோடை துவங்கியதையடுத்து, பூ சாகுபடி அதிகரித்துள்ளது.

பனிப்பொழிவு இல்லாததால், நோய் தாக்கம் இன்றி பூக்கள் சேதம் குறைந்துள்ளதையடுத்து, மார்க்கெட்டுக்கு வரத்து அதிகரிக்கத் துவங்கியுள்ளது. மல்லிகை 2 டன்; முல்லை 1.5டன்; செவ்வந்தி 2 டன் என 5.5 டன் முதல் 6.00 டன் வரை வரத்துள்ளது. விசேஷங்கள் குறைந்துள்ள நிலையில் வரத்து அதிகரித்துள்ளதால், விலை படிப்படியாக குறைந்து வருகிறது.

நேற்றைய மார்க்கெட்டில் மல்லிகை 120 ரூபாய்; சம்பங்கி 60; அரளி 80; மாலை (பெரியது) 120, சிறியது 40 ரூபாயாக குறைந்திருந்தது; அதனால், பூக்கள் வாங்க பெண்கள் ஆர்வம் காட்டத்துவங்கியுள்ளனர்; விற்பனை அமோகமாக நடந்து வருகிறது. வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதால், விலை மேலும் குறையும் என்கின்றனர், வியாபாரிகள்.

## விளைச்சல் அதிகரிப்பு; மஞ்சள் விலை வீழ்ச்சி: விவசாயிகள் கவலை

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2012,23:28 IST

கருத்தை பதிவு செய்ய

மேட்டுப்பாளையம் : ஒரு கிலோ பச்சை மஞ்சள் மூன்று ரூபாய்க்கு விற்பனை செய்வதால், மஞ்சள் பயிர் செய்த விவசாயிகளுக்கு, பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே, மத்திய அரசு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேட்டுப்பாளையம் தாலுகாவில் ஊமப்பாளையம், பாலப்பட்டி, வச்சினம்பாளையம், சிறுமுகை, கல்லாறு, தேக்கம்பட்டி, தோலம்பாளையம், வெள்ளியங்காடு உள்ளிட்ட பல கிராமங்களில், நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கரில், விவசாயிகள் மஞ்சள் பயிர் செய்துள்ளனர். தற்போது எல்லா இடங்களிலும் அறுவடை செய்யப்படுகின்றன. நல்ல விளைச்சல் கிடைத்துள்ள நிலையில், மிகக் குறைந்த விலைக்கு மஞ்சள் விற்பனை செய்வதால், விவசாயிகளின் நிலை பரிதாபமாக உள்ளது. ஓடந்துறை முன்னாள் ஊராட்சி தலைவர் சண்முகம், ஊமப்பாளையம் காரையன் ஆகிய விவசாயிகள் கூறியதாவது: ஒரு ஏக்கரில் மஞ்சள் பயிர் செய்ய, 700 கிலோ விதை மஞ்சள் தேவைப்படுகிறது. கடந்தாண்டு ஒரு கிலோ விதை மஞ்சள் 20 ரூபாய்க்கு வாங்கி நடவு செய்தோம். களை எடுத்தல், மருந்து அடித்தல், அறுவடை செய்தல் என அனைத்து வகை கூலியும் சேர்த்து, மொத்தமாக 75 லிருந்து 80 ஆயிரம் ரூபாய் வரை செலவானது. நன்கு விளைந்தால் ஒரு ஏக்கருக்கு 20 லிருந்து 25 டன் மஞ்சள் கிடைக்கும்.

கடந்தாண்டு ஒரு குவிண்டால் மஞ்சள் (100 கிலோ) 15 ஆயிரம் ரூபாய் வரை விற்பனை ஆனது. இதனால், விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைத்தது. பல விவசாயிகள் மேலும் விலை கிடைக்கும் என, கிடங்குகளில் இருப்பு வைத்தனர். இதை பார்த்த பல விவசாயிகள் இந்தாண்டு பெருமளவில் மஞ்சள் பயிர் செய்துள்ளனர். விளைச்சலும் இரண்டு மடங்காக அதிகரித்ததால், விலை சரிந்து விட்டது.

ஈரோட்டில் தனியார் மஞ்சள் மார்க்கெட்டில் ஒரு குவிண்டால் விரலி மஞ்சள் 2,400 லிருந்து 3,500 வரையும், கிழங்கு மஞ்சள் 2,350 லிருந்து 3,100 ரூபாய் வரை விற்பனையாகி உள்ளது. அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஒரு குவிண்டால் விரலி மஞ்சள் 3,200 லிருந்து 3,650 வரையும், கிழங்கு மஞ்சள் 2,800 லிருந்து 3,300 ரூபாய் வரையும் விற்றுள்ளது. கடந்தாண்டு விலையுடன் ஒப்பிடும் போது, இந்தாண்டு நான்கு மடங்கு விலை சரிந்துள்ளது.

தற்போது தோட்டத்தில் அறுவடை செய்யும் பச்சை மஞ்சள் ஒரு கிலோ மூன்று ரூபாய்க்கு வியாபாரிகள் கேட்கின்றனர். இதனால், மஞ்சள் பயிர் செய்த ஒவ்வொரு விவசாயிக்கும் லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு, கட்டுப்படியாகின்றன விலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மஞ்சள் ஏற்றுமதி செய்ய, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

## நெல் சாகுபடி ஆய்வு

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2012,23:48 IST

கருத்தை பதிவு செய்ய

ஆர்.எஸ்.மங்கலம் : ஆர்.எஸ். மங்கலம் ஒன்றியத்தில் அரிசி உற்பத்தியை பெருக்க பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றை தேசிய உணவு பாதுகாப்பு திட்ட ஆலோசகர் மாலிக் ஆய்வு செய்தார்.

பூச்சி தாக்குதல் குறைவான, அதிக கதிர்கள் வளரும் ஏ.டி.டி. 49 ரக நெல்லை அதிகளவில் சாகுபடி செய்ய விவசாயிகளிடம் வலியுறுத்தினார். சோழந்தூர் ஊராட்சி தலைவர் ஜெயினுலாவுதீன், துணை வேளாண் இயக்குனர் சக்திமோகன், அலுவலர் சேக் அப்துல்லா, தனதுரை மற்றும் உதவி வேளாண் அலுவலர்கள் நாகேஸ்வரி, ராதாகிருஷ்ணன் உடன் சென்றனர்.

---

தினகரன்

## தாராபுரத்தில் கொப்பரை கொள்முதல் மையம் திறப்பு

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-03-15 10:36:48

தாராபுரம் : தாரா புரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலம் அலங்கியம் ஒழுங்குமுறை விற்பனை கூடத் தில் நேற்று கொப்பரை கொள்முதல் மையம் துவக்கவிழா நடைபெற்றது. வருவாய்கோட்டாட்சியர் அழகுமீனா கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பேசியதாவது;

கொப்பரை விலை வீழ்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து, தாராபுரம் தாலுக்கா பகுதியில் உள்ள வேளாண் விவசாயிகள், இப் பகுதியில் கொப்பரை கொள்முதல் நிலையம் துவங்க கேட்டுக் கொண்டனர். மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் தற்போது அலங்கியம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் துவங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் குறிப்பாக கொப்பரை உற்பத்தியாளர்கள் இதை பயன்படுத்தி பலன் பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன் இவ்வாறு பேசினார்.

கொள்முதல் நிலையம் குறித்து உழவர் உழைப்பாளர் கட்சியின் மாவட்ட செயலாளர் ஈஸ்வரமூர்த்தி கூறியதாவது: தனியார் கொப்பரை கொள்முதல் விலை கடுமையான வீழ்ச்சி அடைந்துவிட்டது. இந்த சமயத்தில் அரசு கொள் முதல் நிலையம் துவங்கப்பட்டால் தனியார் கொள் முதல் விலை உயர்வதற்கு வாய்ப்புகள் இருக்கிறது. துவங்கப்படாத நிலை இருந்த போது கிலோ 15 ரூபாய்க்கு மட்டுமே கொள் முதல் செய்யப்பட்டது. இதனால் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தனர். தற் போது அரசு கொள்முதல்

**வம்பன் வேளாண் நிலையத்தில் நெல் விதை நேர்த்தி தொழில்நுட்ப பயிற்சி விவசாயிகள் பங்கேற்க அழைப்பு**

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-03-15 11:51:35

புதுக்கோட்டை: வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் நெல் சாகுபடியில் ஒருங்கிணைந்த விதை நேர்த்தி தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி இன்று நடைபெறுகிறது. இதில் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் பங்கேற்க கலெக்டர் மகேஸ்வரி அழைப்பு விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: புதுக்கோட்டை மாவட்டத்தில் அதிகளவில் சாகுபடி செய்யப்படும் பயிர் நெற்பயிராகும். இம்மாவட்டத்தில் மொத்த சாகுபடி நிலப்பரப்பில் நெல்லானது சுமார் 90,000 எக்டேர் நிலப்பரப்பில் இறவை மற்றும் மானாவாரியாக பயிரிடப்படுகிறது. ஆனால் அதன் உற்பத்தித் திறனானது மிகவும் குறைவாக உள்ளது. மானாவாரியாக நெல் பயிரிடும் இடங்களில் வறட்சியின் காரணமாக முளைப்புத்திறன் மற்றும் பயிரின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

மேலும் பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கும் பயிர் உட்படுத்தப்பட்டு விளைச்சல் குறைகிறது. எனவே, விவசாயிகள் வறட்சி மேலாண்மை மற்றும் பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டுக்கு தகுந்த தொழில் நுட்பங்களைக் கையாண்டு மானாவாரி சூழலில் அதிக விளைச்சல் பெறலாம்.

இது தொடர்பாக புதுக்கோட்டை மாவட்டம் வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் இன்று(15ம்தேதி)காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை விதை நேர்த்தி தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி நடைபெறுகிறது.

இப்பயிற்சியில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள நெல் சாகுபடியாளர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறலாம். மேலும், விவரங்களுக்கு 04322 290321 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டறிந்து கொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## நடப்பு பருவத்தில் பருத்தி வரத்து 6.40 சதவீதம் சரிவு

*2011 அக்டோபர் மாதம் தொடங்கிய நடப்பு பருவத்தில் மார்ச் 11–ந் தேதி வரை பருத்தி வரத்து 6.40 சதவீதம் சரிவடைந்து 2.37 கோடி பொதிகளாக குறைந்துள்ளது என இந்திய பருத்தி கழகம் தெரிவித்துள்ளது. ஒரு பொதி என்பது 170 கிலோ பருத்தியை கொண்டதாகும். கடந்த 2010 அக்டோபர் முதல் 2011 மார்ச் 11 வரையிலான காலத்தில் பருத்தி வரத்து 2.54 கோடி பொதிகளாக இருந்தது.*

*மத்திய அரசு கொள்முதல் விலையை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பினால் பருத்தி அதிகம் விளையும் மாநிலங்களில் விவசாயிகள் பருத்தியை இருப்பு வைத்து காத்திருப்பதே இதற்கு காரணம் என தெரிகிறது. பருத்தி விதை, உரம் மற்றும் எரிபொருள் விலை உயர்ந்து விட்ட நிலையில் கடந்த ஓராண்டில் குறைந்தபட்ச ஆதரவு விலை ஏறக்குறைய 50 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளதாக இந்த மாநிலங்களில் உள்ள விவசாயிகள் தெரிவித்தனர்.*